செய்தி வெளியீடு எண்: 202 நாள்: 05.03.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 4.3.2019 அன்று தலைமைச் செயலகத்தில், மீன்வளத்துறை சார்பில் 125 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகம், மீன் இறங்குதளங்கள், வலைபின்னும் கூடங்கள், மீன்குஞ்சு வளர்ப்பு மையக்கூடம், சுய உதவிக்குழு மகளிர் பயிற்சி மையத்துடன் கூடிய மைய சமையலறைக்கூடம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 13 கோடியே 27 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆய்வகக் கட்டடம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் – பள்ளப்பட்டியில் கால்நடை மருத்துவமனைக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் 17 கோடியே 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கூண்டுகள், தொழில்நுட்ப பூங்கா, மீன்வளப் பயிற்சி நிலையக் கட்டடம், கல்விக் கட்டடங்கள், நன்னீர் அலங்கார சினைமீன்கள் உற்பத்தி மையம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மீன்வளத்தில் முழுமையான ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடைந்திடும் வகையில், மீன் உற்பத்தியை அதிகரித்தல், மீன்வளத்தைப் பாதுகாத்தல், நீடித்த வளங்குன்றா மீன்பிடிப்பினை உறுதி செய்தல், நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளை மேம்படுத்துதல், மீன்பிடிக் கலன்களை பாதுகாப்பாக நிறுத்திட மீன்பிடி துறைமுகங்கள் / மீன் இறங்குதளங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மீன் விற்பனை உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மீன்வளப்பிரிவில் மனிதவள மேம்பாட்டை வலுப்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை மீன்வளத் துறையின் மேம்பாட்டிற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் கிராமத்தில் 113 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகம்; புதுக்கோட்டை மாவட்டம், கட்டுமாவடி கிராமத்தில் 2 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் பொன்னகரம் கிராமத்தில் 1 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், இராமநாதபுரம் மாவட்டம் –

மோர்பண்ணை கிராமத்தில் 1 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், அமைக்கப்பட்டுள்ள மூன்று மீன் இறங்குதளங்கள்;

நாகப்பட்டினம் மாவட்டம், காமேஸ்வரம் கிராமம் மற்றும் புஷ்பவனம் கிராமம் ஆகிய இடங்களில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு வலைபின்னும்கூடங்கள்; தஞ்சாவூர் மாவட்டம், திருமங்கலக்கோட்டை மேலையூர் கிராமத்தில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்குஞ்சு வளர்ப்பு மையக்கூடம்;

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சென்னை – இராயபுரத்தில் சுயஉதவி குழு மகளிர் பயன்பெறும் வகையில் 3 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தங்கும் வசதிகளுடன் கூடிய பயிற்சி மையம் மற்றும் கடல் மீன் உணவு வகைகளை தயாரித்திட ஒரு மைய சமையலறைக்கூடம்;

சென்னை – மாதவரம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வளாகத்தில் 12 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அதிநவீன உயிர் பாதுகாப்பு ஆய்வகம்–நிலை 3 மற்றும் சிறிய விலங்கின ஆய்வகக் கட்டடம்; திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பள்ளப்பட்டியில் 52 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடம்;

என மொத்தம் 138 கோடியே 97 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் உள்ள சீனியப்பா தர்கா திறந்தவெளி கடல் பகுதியில் கூண்டுகள் அமைத்து விலை உயர்ந்த கடல் மீன்களான கடல்விரால் மற்றும் சேங்குனிப்பாறை மீன்களை வளர்க்கும் திட்டத்திற்காக 2 கோடியே 77 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள 100 கூண்டுகள்;

சென்னை, மாதவரத்தில் 2 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மறுசுழற்சி முறையில் கொடுவாமீன் வளர்ப்பிற்கான தொழில்நுட்ப

பூங்கா; இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மீன்வளப் பயிற்சி நிலையக் கட்டடம்; காஞ்சிபுரம் மாவட்டம், வாணியஞ்சாவடியில்
உள்ள மீன்வளப் பட்ட மேற்படிப்பு நிலையத்தில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள முதுகலை பட்டமேற்படிப்பிற்கான கூடுதல் கல்விக் கட்டடம்; சென்னை, ராயபுரத்தில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மீன்வளத் தொழில்நுட்பம் சார் தொழிற்கல்வி நிலையம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுகாவில் உள்ள ஜீயபுரத்தில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள நன்னீர் அலங்கார சினைமீன்கள் உற்பத்தி மையம்;

என மொத்தம் 17 கோடியே 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகக் கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திரு.ஏ. ஞானசேகரன், இ.ஆ.ப., மீன்வளத் துறை இயக்குநர் டாக்டர் கீ.சு. சமீரன், இ.ஆ.ப., தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் சி. பாலச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**